# மெட்ரோ பயணம் இன்று இலவசம்

சென்னை, பிப். 11–

மெட்ரோ ரயிலில், இன்று இலவசமாக பயணம் செய்யலாம்.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும், விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப் பட்டு வந்தது.

இத்துடன், நேற்று முதல், தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., நிலையத்தில் இருந்து, வண்ணாரப் பேட்டை வரை, மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளது.

இன்று இரவு வரை, பொதுமக்கள், மெட்ரோ ரயிலில் இலவச பயணம் செய்யலாம். இந்த ரயில் போக்குவரத்தில், விமான நிலையத்தில் இருந்து, கோயம்பேடு வழியாக, வண்ணாரப்பேட்டைக் கும், விமான நிலையத்தில் இருந்து, சைதாப் பேட்டை வழியாக வண்ணாரப்பேட்டைக்கும், இரு வழிகளிலும் இலவச பயணம் செய்யலாம் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.